<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>

**அசல் வழக்கு எண். 46/2020**

வீரையா, த/பெ. முருகையா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.மா.பாலாஜி , உதவியாளர், நிலை–III என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வீரையா | தொழில் | |
| த/பெ. | முருகையா | வயது | 43 / 2026 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

நாள் : 21.01.2026

பி.வா.சா. 1

<u>முதல் விசாரணை</u>

நான் தாவா வழக்கில் 1ம் பிரதிவாதி என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபணவாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மையானது தான்.

26.08.2020 தேதிய அறந்தாங்கி தலைமை துணை வட்டாட்சியர் மற்றும் பொது தகவல் அலுவலர் வழங்கிய தகவல் சார்வு செய்யப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.05.2020 தேதிய அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் அலுவலத்தில் இருந்து வந்த குறிப்பாணை சார்வு செய்யப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன். பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.10.2025 தேதிய புல எண். 88/12க்குரிய நத்தம் சிட்டா கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.10.2025 தேதிய புல எண். 88/12க்குரிய புலப்படம் கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.09.2020 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து நில நிர்வாகத்துறை வழங்கிய கடிதம் அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

07.01.2022 தேதிய ஆவணம் ரத்து கோரி வழங்கிய அறிவிப்புக்கு பதிவுத்துறையிலிருந்து மதுரை துணைப்பதிவுத்துறை தலைவர் அனுப்பிய கடிதம் அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.05.2022 தேதிய மின்கட்டண ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 01.03.2022 தேதிய குடிநீர் கட்டண ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.03.2012 தேதிய வீட்டுவரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.03.2022 தேதிய வீட்டுவரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.08.2020 தேதிய அஞ்சல ரசீதுகள் எண்ணிக்கை 3 தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.11 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பு பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் எண்ணிக்கை 5 தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.12 வரிசை எண்ணிக்கை 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**